**இந்தியா ஃபவுண்டேஷன் ஃபார் தி ஆர்ட்ஸ்**
**(India Foundation for the Arts – IFA)**
**அரசு உதவிபெறும் மற்றும் இலாப நோக்கற்ற இந்தியப் பள்ளிகளிடமிருந்து கலைக்கல்வித் திட்டத்தின்கீழ் (Arts Education Programme) கலைகள் – ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டங்களுக்கான (Arts-Integrated Projects) வேலைத்திட்ட முன்வரைவுகளை வரவேற்கிறது**

**விண்ணப்பிக்கக் கடைசி நாள்: November 30, 2026**

இந்தியா ஃபவுண்டேஷன் ஃபார் தி ஆர்ட்ஸ் (ஐ.எஃப்.எ) இந்தியாவில் மெட்ரோபாலிட்டன் / பெருநகரப்பகுதிகள் சாராது ஏனைய இடங்களில் அமைந்துள்ள அரசு உதவிபெறும் மற்றும் இலாப நோக்கமற்ற பள்ளிகளின் கலைக் கல்வி மூலமாகக் கற்றல் – கற்பித்தல் செயல்முறைகளை வலுப்படுத்தும் வகையில் கலைகள்- ஒருங்கிணைந்த பயிற்சித் திட்டத்தினைச் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

(கன்னடத்தில் கற்றல், கற்பித்தல்) எனப்படும் கலி – கலிசு கலைக்கல்வித் திட்டம் வெவ்வேறு கலை வடிவங்களைப் பயன்படுத்தி, பள்ளிகளிலுள்ள பாடத்திட்டத்திற்கேற்ற வகையில் கற்பித்தல் முறைகளை வடிவமைத்து, கற்றல் செயல்பாட்டினை ஈடுபாடும் மகிழ்ச்சியுமுடைய தொன்றாக வளர்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த எண்ணத்தினைக் கருத்தில் கொண்டு, ஐ.எஃப்.ஏ. கலை-ஒருங்கிணைந்த கற்பித்தல் முறைகளுக்கு உறுதியான அடித்தளத்தை உருவாக்குவதையும், மாணவர்களிடையே ஆர்வத்தையும் படைப்பாற்றலையும் ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு செயல்படும் அரசு உதவிபெறும் மற்றும் இலாப நோக்கற்ற பள்ளிகளிடமிருந்து வேலைத்திட்ட முன்வரைவுகளை வரவேற்கிறது.

முந்தைய வருடங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள எங்களின் வேலைத்திட்டங்களை அறிந்துகொள்ள இங்கே சொடுக்கவும்.

**திட்டங்களின் நோக்கம் :**

இந்தத் திட்டங்கள் பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்களைச் செயல்படுத்துவதாக அமையலாம்.

- உள்ளூர் / வட்டார கலை வடிவங்களையும் பண்பாட்டுச் செயல்பாடுகளையும் வகுப்பறை கற்றல் கற்பித்தலுடன் இணைத்தல்
- எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதற்கான கற்றல் கற்பித்தல் முறைகளோடு கலைகளை ஒருங்கிணைத்தல்
- மாணவர்களின் வாழ்வனுபங்களைக் கற்றல் செயல்பாடுகளில் சேர்த்தல்
- உள்ளூர் / வட்டார கலைஞர்களையும், சமூகங்களிலிருந்து பெறப்படும் வளங்களையும் இணைத்துப் பணியாற்றுதல்

**திட்டத்தின் கால அளவு:**
குறைந்தது ஒருவருடம் முதல் அதிகப்படியாக 18 மாதங்கள் வரை

**வரவுசெலவுத் திட்ட அளவு (Budget):**
அதிகப்படியாக ரூபாய் 4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம்)

***யார் யார் விண்ணப்பிக்கலாம்?***

*மெட்ரோபாலிட்டன் அல்லது பெருநகரங்கள் சாராத இடங்களிலுள்ள அரசு உதவிபெறும் மற்றும் இலாப நோக்கற்ற பள்ளிகள். விண்ணப்பிக்கும் கல்வி நிறுவனம் உள்ளூர் மொழிகள் சார்ந்து இயங்கக்கூடியதாகவும் கற்றல் கற்பித்தலில் கலையும் பண்பாடும் மிக இன்றியமையாதவை என்ற நம்பிக்கையுடையதாகவும் இருக்க வேண்டும்.*

***தகுதி :***

- *சங்கப்பதிவுச் சட்டம்* 1860 (The Society Registration Act 1860) / *இந்திய அறக்கட்டளைச் சட்டம்* 1882 (The Indian Trust Act 1882) *என்பவற்றின் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்குச் சொந்தமானதாக அல்லது அந்நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் பள்ளியாக இருக்க வேண்டும்.*
- *பள்ளி துவங்கி, குறைந்தது மூன்று ஆண்டுகளாவது செயல்பட்டு வந்திருக்க வேண்டும்.*
- *குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்காவது தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கை* (audited statement) *வைத்திருக்க வேண்டும்.*
- *செயல்பாட்டிலுள்ள நிரந்தர கணக்கு எண்ணை* (PAN) *வைத்திருக்க வேண்டும்.*

***விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள்:***

*உங்களின் திட்ட முன்வரைவுகளை ஆங்கிலம் உட்பட எந்த இந்திய மொழியிலும் எழுதலாம். திட்ட முன்வரைவுகளை ஆங்கிலத்தை விட, பிற இந்திய மொழிகளில் எழுத ஐ.எஃப்.ஏ. ஊக்கப்படுத்துகின்றது.*

*உங்களின் இறுதித் திட்டமுன்வரைவுகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:*

- *வேலைத்திட்டத்திற்கான தலைப்பு*
- *பள்ளியின் செயல்நோக்கம்* (mission) / *கனவு* (vision) / *தொலைநோக்கு* (overview)
- *மாணவர்களின் சமூகப் பண்பாட்டுப் பின்புலம்*
- *விண்ணப்பிக்கும் திட்டத்தின் நோக்கங்கள்*
- *திட்ட முறையியலும் விரிவான பணித்திட்டமும்*
- *வேலைத்திட்டத்தில் பங்கேற்க இருக்கும் பிற* (Resource persons)
- *வேலைத்திட்டத்தை மதிப்பீடு செய்யும் முறை*
- *வேலைத்திட்ட த்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்* (outcomes)
- *விரிவான வரவு செலவுத்திட்டம்* (detailed break-up of budget)

*விண்ணப்பங்கள் பின்வரும் துணை ஆதாரங்களை பின்னிணைப்புகளாகக் கொண்டிருக்க வேண்டும்:*

- *அறக்கட்டளை குறிப்பாணையின்* (Trust Deed) *நகல் / சங்கத்தின் புரிந்துணர்வு ஒப்பந்த* (Memorandum of Association) *நகல்*
- *தற்போதைய அறங்காவலர்கள் / உறுப்பினர்களின் பட்டியலும் அவர்கள் குறித்த விவரங்களும்*
- 12A / *சங்கச் சட்டத்தின்* (12A Society Act) *கீழ் பதிவு நகல்*

- குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்காவது தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கை / கணக்காளரின் அறிக்கை (auditor’s report)
- நிறுவனத்தின் நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN) நகல்
- கலைக்கல்வி குறித்த தற்போதைய அல்லது கடந்தகால செயல்பாடுகள் இருப்பின் அவை பற்றிய விபரங்கள்

பள்ளி நிர்வாகத்தினர் இறுதித் திட்ட முன்வரைவை அனுப்பவதற்கு முன்னதாக அது தொடர்பான கருத்துக்களை அல்லது சந்தேகங்களை, கேள்விகளை எங்களுடன் விவாதிக்க விரும்பினால், அவற்றை **அக்டோபர் 31, 2026**க்கு முன்னதாக **deepak@indiaifa.org** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள் அல்லது 9739175525 (காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை) என்ற எண்ணில் அழைக்கவும்.

உங்களின் இறுதித் திட்ட முன்வரைவு எல்லாவித ஆதாரங்கள், பின்னிணைப்புகளுடன் இணைய வழியாக, 25MBக்கு மிகாமல் ஒரே மின்னஞ்சலில் **deepak@indiaifa.org** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, **நவம்பர் 30, 2026**க்கு முன்னர் அனுப்ப வேண்டுகின்றோம்.

**முழுமையடையாத வேலைத்திட்ட முன்வரைவுகளும் விண்ணப்பிக்கும் தகுதிநிலை இல்லாத விண்ணப்பதாரர்களின் வேலைத்திட்ட முன்வரைவுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதை தயைகூர்ந்து கவனத்தில் கொள்ளவும்.**

**தேர்வு செய்யப்படும் முறை:**

ஒரு புறத்தேர்வாளர் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகளை மதிப்பீடு செய்வர். விண்ணப்பதாரர்கள் இக்குழுவினரின் முன்னிலையில் தங்களின் திட்டம் குறித்த கருத்தோட்டங்களை அளிக்கை செய்ய வேண்டும். வேலைத்திட்டங்களைத் தேர்வுசெய்வதில் ஐ.எஃப்.ஏ.வின் முடிவு இறுதியானது.

**தேர்ந்தெடுக்கப்படும் அனைத்துச் செயல்திட்டங்களும் ஐ.எஃப்.ஏ.வினால் செயல்படுத்தப்படும்.**

**முக்கிய நாள்கள்:**

- மாதிரி வேலைத்திட்ட முன்வரைவைச் சமர்ப்பிக்கக் கடைசி நாள் (திட்டம் குறித்த கருத்துகள், சந்தேகங்கள், கேள்விகள் போன்றவற்றை எங்களுடன் விவாதிக்கக் கடைசி நாள்): **அக்டோபர் 31, 2026.**
- வேலைத்திட்ட முன்வரைவைச் சமர்ப்பிக்கக் கடைசி நாள்: **நவம்பர் 30, 2026**
- தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட முன்வரைவுகள் **ஜனவரி 2027இல்** அறிவிக்கப்படும்.

**குழந்தைகள் உட்பட அனைவரையும் ஆதரிக்கக்கூடிய, மதிக்கக்கூடிய, பாதுகாக்கக்கூடிய பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் ஐ.எஃப்.ஏ. உறுதி பூண்டுள்ளது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பதாரர்கள் இந்நோக்குடன் ஒத்துப்போக வேண்டும் என்பதோடு எப்போதும் அதனைக் கடைப்பிடிக்கவும் வேண்டும்.**